## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No.36/2022 | Date : 22.02.2024 | PW 1 |
|---|---|---|
| Name முத்துசாமி | S/o. லட்சுமி நாராயணன் | |
| Evidence Recorded Time: 11.15 A.M. to 11.32 A.M | | |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-**

நான் என் செலவில் கிணறு வெட்டியதற்கான ஆதாரம் ஒப்படைத்துள்ளேனா என்றால் ஆதாரம் இல்லை. கல் மண்டபம் எத்தனை ஆண்டுகளாக குடோனாக பயன்படுத்தி வருகிறது என்றால் 30 ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. கல் மண்டபத்திற்கு பல ஆண்டுகளுக்கு முன் கட்டளை நிர்வாகி மூலம் வாடகை குத்தகை கட்டணம் தாத்தா லட்சமி நாராயனன் சாட்சி கையெழுத்து போட்டார் என்றால் குத்தகை எதுவும் கிடையாது வாடகை பத்திரம் எதுவும் கிடையாது. கல் மண்டபத்திற்கு எப்போது மின் இணைப்பு வாங்கினேன் என்றால் நினைவில்லை. மின் இணைப்பு என் வீட்டு வரி ரசீது கொடுத்து வாங்கினேன் என்றால் இல்லை. கல் மண்டபத்திற்கு எத்தனை வருடமாக வரி கட்டுகிறோம் என்றால் நாங்கள் 30 வருடமாக கட்டுகிறோம். அதற்கு முன் என் அப்பா மற்றும் தாத்தா செலுத்தி வந்தனர். நான் வரி கட்டுவதால் எங்கள் அனுபவத்திற்கு உட்பட்ட என்று சொல்ல முடியாது என்றால் சரியல்ல. 9363409402 என்ற அலைபேசி எண் யாருடையது என்றால் தெரியாது. மேற்படி எண்ணில் இருந்து தான் மிரட்டினேன் என்றால் நான் யாரையும் மிரட்டவில்லை. நங்கவள்ளி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து சிஎஸ்ஆர் பெறப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. காவல் நிலையத்தில் நான் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தேனா என்றால் இல்லை. கல் மண்டபத்திற்கு வரி வாங்கிக் கொள்ளும்படி நான் நங்கவள்ளி பேரூராட்சி செயல் அலுவலரை நிர்பந்தப்படுத்தினோம் என்றால் சரியல்ல. வரி வாங்காததால் போராட்டம் நடத்தினோம் என்றால் வரி வாங்க மறுத்தது சம்மந்தமாக உண்ணாவிரதம்இருக்க முடிவு செய்து நோட்டீஸ் அச்சடித்தோம். ஆனால் போலீஸ் அனுமதி வழங்காததால் உண்ணாவிரதம் இருக்கவில்லை. நோட்டீசும் விநியோகம் செய்யவில்லை. நாங்கள் நோட்டீசை விநியோகம் செய்தோம் என்றால் சரியல்ல. கோவில் சொத்தை ஆக்கிரமிப்பு செய்யும் எண்ணத்தில அவதுறாக நோட்டீஸ் அச்சடித்தோம் என்ற சொன்னால் சரியல்ல. பொய்யான வரி ரசீது வைத்துக் கொண்டு தவறான மின் இணைப்பு பெற்றுக் கொண்டு கோவில் சொத்தை ஆக்கிரமித்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. மார்கழி மாதம் உற்சவம் ஆரம்பத்தில் இருந்தே செய்து கொண்டுள்ளோம். கோவில் நிர்வாகத்தில் 5 வருடமாகத்தான் செய்து கொண்டுள்ளதாக சொன்னால் சரியல்ல. அவ்வாறு எழுதிக் கொடுத்தால் தான்

அனுமதிப்போம் என்று சொன்னதால் எழுதிக் கொடுத்தோம். நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து ஸ்டேடஸ் உத்தரவு பெற்ற பிறகு அவ்வாறு எழுதி வாங்கினார்கள். என்னை யாரும் மிரட்டவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

ஒம்/– PW1

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எஸ்.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டூர்.